[திரு. ஆர். செங்காளியப்பன்] [1987 மார்ச் 4

(பிற்பகல் 2—00.)

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில், இந்த ஆலைகளை எல்லாம் எடுத்துக் கொள்வதாக உறுதி அளித்தார்கள். அதில் எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. 2 ஆலைகள் எடுக்கப்பட்டன. அங்கே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பற்றி மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களிடத்தில் பேசினோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு அது குறித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்கள்மீதுள்ள கேஸ்களை எல்லாம் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5—3—1987) காலை 10—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—01 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

23. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS